21.08.2025

MC.11/2024

PW-2, பால்சாமி

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மகள் குருவம்மாளை எதிர்மனுதாரருக்கு எப்போது திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் 2012ம் வருடம். எனது மகள் திருமணம் முடிந்த பிறகு எத்தனை வருடம் கழித்து எனது வீட்டிற்கு நிரந்தமாக வந்தார் என்றால் கடந்த 2 வருடத்திற்கு முன்பு. அதற்கு இடைப்பட்ட காலத்தில் எவ்வளவு காலம் எனது மகள் எதிர்மனுதாரருடன் வாழ்ந்து இருப்பார் என்றால் அவ்வப்போது வாழ்ந்துவந்தார். மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கு மனுதாரருடன் நான் வந்தேனா என்றால் நான் வந்தேன். அந்த விவாகரத்து வழக்கு எதிர்மனுதாரருக்கு சாதகமாக முடிந்தது என்றால் சரிதான். நான் செய்து வரும் விவாசயம் எவ்வளவு நிலம் என்றால் 25 செண்ட். அந்த செண்ட் சுமார் 2 லட்சம் போகுமா என்றால் 1 லட்சம் போகும். அந்த விபரம் எனது மகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது மகள் தாக்கல் செய்துள்ள Asset and liability Affidavit ல் எனக்கு சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீடு சொந்த வீடு என்றால் சரிதான். என் பெயரில் உள்ள சொத்துக்களில் எனது மகளுக்கு பங்கு உள்ளதா என்றால் சரியல்ல. விவாகரத்து வழக்கு போடுவதற்கு முன்பு எனது மகளின் பிள்ளைகளை எதிர்மனுதாரர் தான் பார்த்து வந்தார் என்றால் சரிதான். எனது மகள் வேலைக்கு செல்கிறாளா என்றால் செல்லவில்லை. எனது மகன் என்ன வேலை செய்கிறார் என்றார் தினக்கூலி செய்து வருகிறார். நான் எனது மகளுக்குஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகள் தான் எவ்வித காரணமும் இல்லாமல் பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றும்  அதன் காரணமாக விவாகரத்து வழக்கும் அவருக்கு சாதகமாக உள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் நாங்கள் விவாகரத்து வழக்கிற்கு எதிராக மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.